## கிள்ளான் நகராண்மைக் கழகத்தின்
# வாகனமற்ற நாள்
### 200 பங்கேற்பாளர்கள் குதூகலமான பங்கேற்பு


சொனாம் ரோபிக் பயிற்சியில் நொராய்னி ரோஸ்லான், ஃபூ லோக் பிங், கவுன்சிலர் கண்மணி

**பி.ஆர்.ஜெயசீலன்**

கிள்ளான், செப். 26-
மாதந்தோறும் கிள்ளான் நகராண்மைக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் வாகனமற்ற நாள் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை கிள்ளான் லமான் செனி சஃபாரி வளாகத்தில் நடைபெற்றது.

கிள்ளான் நகராண்மைக் கழகத்துடன் மொத்த வியாபாரத்தின் முதன்மை நிறுவனமாக விளங்கும் ஜி எம் கிளாங், கெலரி டி ராஜா சுல்தான் அப்துல் அஸிஸ் இணை ஏற்பாட்டிலான இந்நிகழ்ச்சியில் கிள்ளான் நகராண்மைக் கழகத் தலைவர் நொராய்னி ரோஸ்லான் ஜி எம் பேரங்காடியின் இயக்குநர் ஃபூ லோக் பிங், இதர பிரிவுகளின் அதிகாரிகள் என 200க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

சொனாம் ரோபிக் (இசையுடன் உடற்பயிற்சி), மறுசுழற்சிப் பொருட்கள் சேகரிப்பு, புகைப்படப் போட்டி, அதிர்ஷடக் குலுக்கு, உள்ளூர் பழங்கள், காய்கறி, வியாபாரச் சந்தை, பல்வேறு போட்டிகள் என நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பேசிய கிள்ளான் நகராண்மைக் கழகத் தலைவர் நொராய்னி ரோஸ்லான், கிள்ளானை புகையற்ற நகரமாக உருவாக்க வேண்டும் என்ற திட்டத்தில் மாதம் ஒருமுறை சுமார் ஐந்து மணி நேரத்திற்கு வாகனமற்றப் பகுதியாக இப்பகுதியை உருவாக்கி சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதில் அனைத்து இனத்தவர்களுடன் வெளிநாட்டினரும் ஒற்றுமை உணர்வுடன் பங்கேற்பது பாராட்டுக்குரியது எனவும் குறிப்பிட்டார்.

கிள்ளான் நகரம் மலேசிய நாட்டின் பெருமைக்குரிய பகுதியாக விளங்குவது நமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இங்குதான் சிறப்பான செண்டோல், சீன உணவு வகைகள், இந்திய உணவு வகைகள், இந்தியர்களின் பாரம்பரிய ஆடை அணிகலன்கள் போன்றவற்றுடன் மலாய்க்கார நண்பர்கள் விரும்பி உண்ணும் 'தெம்பே' போன்றவையும் பிரபலமானவை.

விரைவில் நாம் மாநகர் என்ற அந்தஸ்துக்கு உயர விருப்பதால் நாம் பல்வேறு மாற்றங்களுக்குத் தயாராக வேண்டும். இன்று அனைவரும் 'பாத்தேக்' உடைகளை அணிந்து வந்திருப்பது நமது உள்ளூர் தயாரிப்புகளுக்கு ஆதரவு வழங்குவதுடன் நம் நாட்டுத் தயாரிப்புகளுக்கு ஊக்கமூட்டும் வகையில் அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டார்.


கலந்து கொண்ட பிரமுகர்களுடன் குழுப்படம்

கிள்ளான் நகராண்மைக்கழகம் மேற்கொள்ளும் திட்டங்களுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும் ஜி எம் கிளாங் பேரங்காடி நிறுவனத்திற்கு நன்றி கூறிக் கொள்வதாகக் கூறிய அவர், இது போன்ற வாகனமற்ற நிகழ்ச்சிகளுக்கு பொது மக்கள் திரளாக வந்து கலந்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் வெற்றிபெற்ற அதிர்ஷடக் குலுக்கு வெற்றியாளர்கள் அனைவருக்கும் ஜி எம் கிளாங் நிறுவன இயக்குநர் ஃபூ லோக் பிங் பரிசுகள் எடுத்து வழங்கினார்.

# நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி


படுத்த படுக்கையாக இருக்கும் ஓர் இந்தியரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறும் டத்தோ ஃபைசால். அருகில் கருப்புசாமி, சுப்பிரமணியம்.

**க. கலை**

போர்ட்டிக்சன், செப். 26-
லிங்கி சட்டமன்றத் தொகுதியில் மிகக்கடுமையான நோயால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருப்பவர்களுக்கு அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாநில அரசு ஆட்சிக்குழு உறுப்பினருமான டத்தோ முகமட் ஃபைசால் நேரில் சந்தித்து உதவிகள் வழங்கினார்.

பெங்காலான் டுரியான், ஆயர் கூனிங், பெர்மாத்தாங் பாசீர், கெம்பாஸ் ஆகிய பகுதிகளில் அவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியதோடு பால்மாவு, பெம்பர்ஸ் போன்றவற்றை வழங்கினார்.

டத்தோ முகமட் ஃபைசாலுடன் மஇகா தலைவர்களான கி. சுப்பிரமணியம், பெங்காலான் கெம்பாஸ் கு. கருப்புசாமி ஆகியோர் உடன் சென்றனர்.

## காஜாங் ஸ்ரீ சத்திய சாய்பாபா மையம் – வெஸ்ட்கன்றி கிழக்குத் தமிழ்ப்பள்ளி ஏற்பாட்டில்
# இலவச மருத்துவ முகாம்




**எம். அன்பா**

காஜாங், செப். 26-
மக்கள் தங்களது உடல் ஆரோக்கியத்திற்கு எப்போதும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். இதனை முதன்மை நோக்கமாகக் கொண்டு காஜாங் ஸ்ரீ சத்திய சாய்பாபா மையம் - வெஸ்ட்கன்றி கிழக்குத் தமிழ்ப்பள்ளி பெற்றோர் - ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.
தேசிய புற்றுநோய்க் கழகம், பெர்கேசோ, காஜாங் கிளினிக் லிங்கம் ஆகிய தரப்புகள் இந்த இலவச மருத்துவ முகாமுக்கு ஒத்து ழைப்பு நல்கின.

ஆண் - பெண் புற்றுநோய் பரிசோதனை, ரத்த அழுத்தம், உடல் எடை பரிசோதனை, மனநல ஆலோசனை, சிறுநீர் - ரத்தப் பரிசோதனை, மாணவர்களுக்குக் கண் பரிசோதனை, பி40 தரப்பினருக்கான பெக்கா 40 சுகாதாரப் பரிசோதனை போன்றவை இதில் இடம்பெற்றன என்று டாக்டர் விக்னேஸ்வரி கூறினார்.

அனைத்துத் தரப்பினரும் தங்களுடைய ஆரோக்கியமான வாழ்வுக்கு இவ்வாறான பரிசோதனைகளை செய்துகொள்வது கட்டாயம் என்று காஜாங் ஸ்ரீ சத்திய சாயபாபா மையத்தின் தலைவர் எஸ். யோகேந்திரன் கூறினார்.

இதுபோன்ற மருத்துவப் பரிசோதனைகளைச் செய்து கொள்வதற்கு நிறைய பணம் செலவாகும். ஆனால் ஏழைகளும் பயன்பெறும் வகையில் இலவசமாக இந்த மருத்துவ முகாம் நடத்தப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.



வெஸ்ட்கன்றி கிழக்குத் தமிழ்ப்பள்ளி மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை இந்த மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. பொதுமக்கள் திரண்டு வந்து மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டனர். இந்த மருத்துவ முகாமில் டாக்டர் சாய் கணேஷ், டாக்டர் கலை, அவர்களின் சக மருத்துவர்கள், காஜாங் ஸ்ரீ சத்திய சாய்பாபா மையத்தின் பொருளாளர் பி. கஜேந்திரன், நிர்வாகக் குழுவினர், தன்னார்வலர்கள், பள்ளி பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தின் தலைவர் எஸ். கணேஷ், டாக்டர் குணாளன், ஜெ. ஜெயகாந்தன், பள்ளி மேலாளர் வாரியப் பொறுப்பாளர்கள், தலைமையாசிரியர், துணைத் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரின் பங்கு அளப்பரியது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தச் சுகாதாரப் பரிசோதனை முகாமில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# கெப்போங் நாடாளுமன்ற உறுப்பினர் மஇகாவினரை சந்திப்பதைத் தவிர்ப்பது ஏன்?
## தொகுதித் தலைவர் கேள்வி



**எஸ். வெங்கடேஷ்**

கோலாலம்பூர், செப். 26-
கெப்போங் தொகுதி மஇகாவின் 29ஆம் ஆண்டு பேராளர் மாநாடு நேற்று முன்தினம் ஜின்ஜாங் செலாத்தான் தம்பாஹானில் உள்ள ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தில் நடத்தப்பட்டது.

இந்தத் தொகுதி மாநாட்டில் கூட்டரசுப் பிரதேச மஇகா தொடர்புக்குழுத் தலைவர் டத்தோ ராஜா சைமனும் செனட்டர் டத்தோஸ்ரீ எஸ். வேள்பாரியும் கலந்து கொண்டனர்.
மாநாட்டில் உரையாற்றிய தொகுதித் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, கெப்போங் மஇகா தொடர்ந்து பலதரப்பட்ட சமூகச் சேவைகளைச் செய்து வருகின்றது. அண்மையில்கூட கலை நிகழ்ச்சி ஒன்றை நடத்தி அதில் கிடைத்த தொகை மூலம் மாணவர்களுக்கு உதவி வழங்கி னோம் என்று கூறினார்.

இந்நிலையில் தற்போது மஇகாவும் ஒற்றுமை அரசாங்கத் தில் இடம்பெற்றுள்ளது. அவ்வகையில் கெப்போங் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரைச் சந்திக்க பலமுறை முயற்சி செய்தோம். ஆனாலும் சந்திக்க முடியவில்லை.

அனைவரும் ஒரே குடையில் கீழ் இணைந்து பயணித் தோம். இந்தச் சூழ்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஏன் எங்களை சந்திப்பதைத் தவிர்க்கிறார் என்பது விளங்கவில்லை எனவும் கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய டத்தோ ராஜா சைமன், மாணவர்களுக்கு கல்வி உதவி நிதி, கடன் வழங்கும் கட்சியாக மஇகா விளங்குகிறது. மஇகா இன்னும் வலுப்பெற வேண்டுமென்றால் கடைநிலை வரையிலான உறுப்பினர்கள் வரையில் ஒற்றுமை உணர்வை மேலோங்கச் செய்ய வேண்டும் என நினைவுறுத்தினார்.

இதற்கிடையே இந்த மாநாட்டில் 60க்கும் மேற்பட்ட தொகுதி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# செலாமா தமிழ்ப்பள்ளி 70ஆம் ஆண்டு நிறைவு விழா

**மீண்டும் பள்ளிக்குப் போகலாம் ஒன்றுகூடும் நிகழ்ச்சி**



செலாமா, செப். 26-
செலாமா தமிழ்ப்பள்ளி 70ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு செலாமா தமிழ்ப்பள்ளி மேலாளர் வாரியமும் பள்ளி ஆசிரியர் கழகமும் இணைந்து 'மீண்டும் பள்ளிக்குப் போகலாம்' நிகழ்ச்சியை வரும் 26.11.2023 காலை 10 மணி தொடக்கம் செலாமா மாவட்ட மன்ற மண்டபத்தில் விருந்துபசரிப்புடன் கூடிய ஒன்றுகூடல் நிகழ்ச்சியாகவும் பிறகு பள்ளி வளாகத்தில் பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சியாகவும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.



கடந்த 50 ஆண்டுகள் பின்னோக்கி, இப்பள்ளியில் பணியாற்றிய தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள், ஒரே இடத்தில் ஒன்றுகூடி மகிழும் ஓர் இனிமையான நிகழ்ச்சியாக இந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சி அமையவுள்ளது.

இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டுக்குழுத் தலைவரும் செலாமா தமிழ்ப்பள்ளி மேலாளர் வாரியத் தலைவருமான மு.திருஞான சம்பந்தன் பள்ளி மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் அறிமுக விழாவில் தலைமையுரை ஆற்றுகையில் கூறினார்.

வரவேற்புரை ஆற்றிய பள்ளி தலைமையாசிரியர் திருமதி கலைவாணி பெருமாள், இந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சியின் நோக்கங்களை விரிவாக விளக்கினார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளியின் முன்னாள் தலைமையாசிரியரும் மேலாளர் வாரிய உறுப்பினரும் ஆலோசகருமான இராம. அய்யாவு நிதித் திரட்டும் நடவடிக்கையைத் தொடக்கிவைத்தார். நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முன்னாள் மாணவர்கள், பெற்றோர் முன்வந்து அழைப்பு அட்டைகளைப் பெற்றுக்கொண்டு தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

இந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சி தொடர்பான மேல் விவரங்களுக்குத் தலைமையாசிரியர் திருமதி கலைவாணி பெருமாள் 017-4945301, பள்ளி மேலாளர் வாரியத் தலைவர் மு. திருஞான சம்பந்தன் 011-36006913 ஆகியோருடன் தொடர்புகொள்ளலாம்.

## அண்டை அயலார் இயக்கமும்
# போலீசும் இணைந்து கொடி ஏற்றினர்




**பொன்முகம்**

தைப்பிங், செப். 26-
மலேசிய தினத்தின் கொண்டாட்டத்தை நினைவுகூரும் விதமாக 16.9.2023ஆம் நாள் இரவு பொக்கோ அசாம் அண்டை அயலார் நல்லுறவு இயக்கமும் போலீசும் இணைந்து மலேசியக் கொடியை ஏற்றும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

பொக்கோ அசாம் போலீஸ் நிலைய வளாகத் தில் தேசிய கீதம் இசையுடன் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அப்போலீஸ் நிலையத்தின் துணை அதிகாரி டோமி முன்னின்று மரியாதை செலுத் தினார். அப்போது அங்கு திரண்டிருந்த அண்டை அயலார் நல்லுறவு இயக்கத்தின் தலைவர் ஹாஜி ஹஷிம், துணைத் தலைவர் கி. மணிவாசகம், இயக்கத்தின் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், போலீஸ் நிலைய அதிகாரிகள், சிறுவர்கள் ஆகியோர் மலேசியக் கொடிகளை அசைத்து மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். இச் சிறப்பு நிகழ்ச்சிக்குப் பின்னர், குழுமியிருந்த அனைவரும் குறுகிய தூரம் நடைப் பயணம் சென்று அருகில் இருந்த இயக்கத்தின் பணி மனையில் ஒன்றுகூடினர். அங்கு மலேசிய தினத்தைக் கொண்டாடும் வகையில் போலீஸ் நிலையத்தின் உயர் அதிகாரிகளும் இயக்கத் தின் பொறுப்பாளர்களும் தேசிய ஒற்றுமைக்கு அடையாளமாக மாவட்ட ஒற்றுமைத் துறைத் துணை அதிகாரி முகமது இக்வானோடு இணைந்து கேக் வெட்டினர்.